DINAMALAR

20 MAR 2023

PAGE 3

# புதுச்சேரி பல்கலையில் கருத்தரங்கம் நிறைவு

**புதுச்சேரி, மார்ச் 20–**
புதுச்சேரிபல்கலைக்கழகத்தில் 'சுற்றுச்சூழல் சிந்தனை மற்றும் கருத்தியல்' குறித்ததேசிய கருத்தரங்கம் நிறைவு விழா நடந்தது.

கருத்தரங்கில் துணை வேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கினார். ஹிந்தி துறைத் தலைவர் பத்மபிரியா வரவேற்றார். யூகோ வங்கியின் சென்னை மண்டலத் தலைவர் ராஜேஷ்குமார் திவாரி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இளைஞர்களின் பங்களிப்பு அதிகரித்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.



புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் 'சுற்றுச்சூழல் சிந்தனை மற்றும் கருத்தியல்' குறித்த தேசிய கருத்தரங்கம் நிறைவு விழா நடந்தது.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் பவானி, பழங்கால இந்திய சிந்தனை ஓட்டத்தில் உள்ள இயற்கை வழிபாட்டின் மனித முயற்சிகள் குறித்து பேசினார்.

கோவை, பி.எஸ். ஜி.கிருஷ்ணம்மாள் மகிளா கல்லூரி, ஹிந்தித் துறைத் தலைவர் பத்மாவதி, தமிழ்ச் சங்க இலக்கியங்களில் காணப்படும் இயற்கையின் பன்முகத்தன்மை குறித்து விவாதித்தார்.

கேரளா பல்கலைக்கழகத்தின் இயக்குனர் ஜெயச்சந்திரன், பிரபல மலையாள எழுத்தாளர்களின் படைப்புகள் பார்வையில் இந்திய உரைநடை இலக்கியத்தில் வெளிப்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் உணர்வின் பல்வேறு பரிமாணங்களை வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

தொடர்ந்து, துணை வேந்தர் குர்மீத் சிங் கருத்தரங்க கட்டுரைகளின் தொகுப்புகளைவெளியிட்டார். நான்கு தொழில்நுட்ப அமர்வுகளில் மொத்தம் 30க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை நாட்டின் பல்வேறு மாநிலங்களின் பிரதிநிதிகள் சமர்ப்பித்தனர்.

பேராசிரியர் கிளமென்ட் சகாயராஜா லூர்து, சென்னை மண்டல யூகோ வங்கியின் உதவி பொது மேலாளர் உமாதேவி மல்லியா, ராஜ்பாஷா, அதிகாரி பிலோனா மேத்யூ, புதுச்சேரி கிளையின் முதன்மை மேலாளர் லயா துர்கா, உதவி பொது மேலாளர் ஜிதேந்திர குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

டாக்டர் அனிதா சிங், ஆராய்ச்சி அறிஞர்கள் அமன் ரிஷி சாஹு மற்றும் ரஜீப் குமார் பேஜ் ஆகியோர் கருத்தரங்கின் பல்வேறு அமர்வுகளை தொகுத்து வழங்கினர். ஒருங்கிணைப்பாளர் ஜெயசங்கர் பாபு நன்றி கூறினார்.